

கழகத் தலைவர் அவர்களின் முன்னாள் உதவியாளர் ஹரி கிருஷ்ணன் அவர்கள் உடல் நலக்குறைவால் மறைவெய்திய செய்தி அறிந்து கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கழகத் தலைவர் அவர்களுடன் சென்று அன்னாரது உடலுக்கு அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

### பேராவூரணி தொகுதியில் – சரபேந்திர ராஜபட்டினம் பாப்பாங்கண்ணி ஆறு அருகே

# ஆற்றின் முகத்துவாரத்தில் தடுப்பணை கட்டித்தாரீர்!

### சட்டப்பேரவையில் – பேராவூரணி என்.அசோக்குமார் வலியுறுத்தல்!



சென்னை, ஆக. 24-

பேராவூரணி தொகுதி கழக எம்.எல்.ஏ., பேராவூரணியில் கடற்கரையை ஒட்டி ஓடும் சரபேந்திர ராஜபட்டினம் பாப்பாங்கண்ணி ஆற்றின் முகத்துவாரத்தில் தடுப்பணை கட்டித் தருமாறு கோரிக்கை விடுத்தார்.

சட்டப்பேரவையில் அவர் குறிப்பிட்டதாவது:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி சட்டமன்றத் தொகுதிக்கட்பட்ட சரபேந்திரராஜபட்டிணம் பாப்பாங்கண்ணியாறு அருகே தடுப்பணை, வில்லுணிவயல், அம்புலியாறு அருகே தடுப்பணை குப்பதேவன் திருவதேவன், நரசிங்க காவேரி ஆறு அருகே தடுப்பணை. பண்ணவயல், அக்கினியாறு அருகே தடுப்பணை அமைக்க வேண்டியது அவசியம் ஆகும்.

“காலநிலை மாற்றத்தின் காரணமாக ஆற்றின் துவர முகாரத்தின் வழியாக 2 அல்லது 5 கி.மீ வரை கடல் நீர் உட்புகுவதால் குடிநீர் மற்றும் விவசாய நிலங்கள் அதிகளவில் பாதிக்கப்படுவதால் அரசு இந்தாண்டே இந்த நான்கு தடுப்பணைகளையும் அமைத்துத் தர வேண்டும்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

### கேரளத்தில் ஓணம் பண்டிகையை முன்னிட்டு

# சென்னை விமான நிலையத்தில் பயணிகள் கூட்டம்!

### பல மடங்கு கட்டண உயர்வால் பொதுமக்கள் கடும் அதிர்ச்சி!

சென்னை, ஆக.24-

கேரளத்தில் ஓணம் பண்டிகையை முன்னிட்டு சென்னையில் இருந்து கொச்சி, திருவனந்தபுரம், கோழிக்கோடு, கண்ணூர் விமானங்களில் பயணிகள் கூட்டம் அலைமோதுகிறது. இதனால் விமான கட்டணமும் பல மடங்கு உயர்ந்துள்ளது. பயணிகள் கடும் அதிர்ச்சிக்குள்ளாகியுள்னர். கேரள மாநிலத்தில் ஓணம் பண்டிகை வரும் 26ம் தேதி விமரிசையாக கொண்டாடப்பட உள்ளது. தமிழகத்தில் பொங்கல் பண்டிகை கொண்டாடுவது போன்று கேரளத்திலும் ஓணம் விமரிசையாக கொண்டாடப்படுகிறது. கடந்த 16ம் தேதியே இந்த பண்டிகை கொண்டாட்டம் தொடங்கி விட்டது. இதனால் கேரளா முழுவதும் விழாக்கோலம் பூண்டுள்ளது.

இந்நிலையில், வெளியூர் மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் கேரள மாநிலத்தவர்கள், தங்கள் சொந்த ஊர்களுக்கு சில தினங்களுக்கு முன்பே சென்று, குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுடன் இந்த பண்டிகையை கொண்டாடுவது வழக்கம். அதன்படி சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வசிக்கும் கேரள மாநிலத்தவர்கள், தங்களது சொந்த ஊர்களுக்கு செல்ல தொடங்கியுள்ளனர். அவர்களுக்காக சிறப்பு ரயில்கள், பஸ்கள் இயக்கப்படுகின்றன. அவற்றில் பலர் பயணித்து வருகின்றனர். அதே நேரத்தில் ரயில், பஸ்களில் நேரம் அதிகமாகும் என்பதால் சிலர், விமானங்களி லும் பயணித்த வண்ணம் உள்ளனர்.

இந்நிலையில், சனி, ஞாயிறு விடுமுறை நாட்களுடன் ஓணம் பண்டிகையை சிறப்பாக கொண்டாடுவதற்கு, சென்னை யில் இருந்து கொச்சி, திருவனந்தபுரம், கோழிக்கோடு, கண்ணூர் ஆகிய இடங்களுக்கு நேற்று முதலே ஏராளமானோர் விமான பயணங்களை மேற்கொண்டுள்ளனர். பலரும் விமானத்தில் பயணிக்க தொடங்கியுள்ளதால் சென்னை விமான நிலையத்தில் பயணிகள் கூட்டம் அலைமோதுகிறது. இதனால் விமான கட்டணங்களும் பல மடங்கு அதிகரித்துள்ளது. பயணிகள் கடும் அதிர்ச்சியடைந்துள்ளனர். ஆனாலும் பண்டிகையை உற்சாகத்துடன் கொண்டாட கட்டணத்தை பொருட்படுத்தாமல், தங்கள் பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.

அதே நேரத்தில், பண்டிகை காலங்களில், கேரள மாநிலத்துக்கு கூடுதல் விமானங்களை சென்னையில் இருந்து இயக்க வேண்டும் எனவும் பயணிகள் கோரிக்கையும் விடுத்துள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திமிரி நா. சீனிவாசன்
### ஆகஸ்ட் 24 (2018)



தனது இளம் வயதிலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்

இருபது ஆண்டுகளுக்கும் மேலாக திமிரி ஒன்றியக் கழகச் செயலாளராக தொடர்ந்து பணியாற்றியவர். தலைமைச் செயற்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### புதுச்சேரியில் இன்று பட்ஜெட் தாக்கல்!

புதுச்சேரி, ஆக.24-

புதுச்சேரியில் முதல் முறையாக தற்காலிக பேரவைத்தலைவர் தலைமையில் இன்று காலை ஆளுநர் உரையும், மதியம் பட்ஜெட் தாக்கலும் நடக்க இருக்கிறது.

புதுச்சேரியில், 16வது சட்டப்பேரவையின் முதல் கூட்டம் கடந்த மே 20ம் தேதி பேரவைக் கூடத்தில் நடைபெற்றது. அன்றைய தினம் புதிதாக சட்டப்பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்ட பின் சட்டப்பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

பேரவைத்தலைவர் தேர்தல் நடத்த துணைநிலை ஆளுநருக்கு ஜூன் மாதம் கடிதம் அனுப்பியும் இது வரை ஒப்புதல் கிடைக்கவில்லை. பேரவைத்தலைவர் பதவியை பாஜக கோரி வருகிறது. ஆனால் முதல்வர் ரங்கசாமி அதிமுகவுக்கு இப்பதவியை தர விரும்புவதால் இழுபறி நீடிக்கிறது.

வழக்கமாக பேரவைத்தலைவர் தேர்தல் நடத்தி தேர்வானவர் தலைமையில் ஆளுநர் உரை, பட்ஜெட் தாக்கல் நடக்கும். தேர்தல் முடிந்து நூறு நாட்களாகியும் இதில் முடிவு ஏற்படவில்லை. அதனால், புதுச்சேரியில் முதல் முறையாக தற்காலிக பேரவைத்தலைவர் தலைமையில் இன்று சட்டப்பேரவை காலை 9.30 மணிக்கு கூடுகிறது.

பட்ஜெட் கூட்டத்தை துவக்கி வைக்க துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன் சட்டப்பேரவை வருகிறார். அவரை தற்காலிக பேரவைத் தலைவர் அன்பழகன் வரவேற்று இருக்கைக்கு அழைத்து செல்வார். அங்கு ஆளுநர் உரையாற்றுவார். அதைத்தொடர்ந்து அவரை வழியனுப்பிய பிறகு, அலுவல் ஆய்வுக் குழு கூடி எத்தனை நாட்கள் பேரவை நடக்கும் என்பதை முடிவு செய்யும்.

பின்னர் மதியம் 3 மணிக்கு நிதித் துறை பொறுப்பு வகிக்கும் முதல்வர் ரங்கசாமி, 2026-27ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்கிறார். இம்முறை மத்திய அரசானது புதுச்சேரிக்கு ரூ. 14,300 கோடி பட்ஜெட்டுக்கு ஒப்புதல் தந்துள்ளது.

# பார்ப்போம்! படிப்போம்! படைப்போம்!

**“தேர்தலோடு திவால் ஆகிவிட்டது திமுக...**
**இப்போது எங்கே இருக்கிறது அந்தக் கட்சி?”**
**என்று கேட்பவர்களுக்குத் தெரியாது**

**குருதி நாளத்தில் கொள்கையை ஏற்றி இரு வண்ணக் கொடியை இறுகப்பற்றி**

**“திராவிட மாடல் நாயகன் வாழ்க” என்று, அடி வயிற்றின் ஆழத்திலிருந்து அண்டம் அதிரக் குரல் கொடுக்கும் அந்தத் தொண்டனின் உணர்வில் ஆழ வேர் விட்டிருக்கிறது தி.மு.க. என்பது!**

எனினும், திமுகழகத் தோழனே.... அது மட்டுமே நம் அடையாளம் அன்று!

பேசிப் பேசியும், எழுதி எழுதியும் வளர்ந்த இயக்கம், நம் திராவிட இயக்கம்! தலைவர்கள் மணிக்கணக்கில் பேசினாலும் அதனைக் கேட்பதற்கும், ஆயிரக் கணக்கான பக்கங்களில் எழுதினாலும், அதனைப் படிப்பதற்கும் தி.மு.க.வில் தொண்டர்கள் நிறைந்திருந்தார்கள்! அதுவே நம் கழகத்தின் அடையாளமும், பெருமையும் ஆகும்!

நம் தலைவர்கள் திரைப்படங்களில் வசனம் எழுதினார்கள். அது வளமான பாடப்புத்தகம் போல இருந்தது! நம் தலைவர்கள் பொதுக்கூட்டங்களில் பேசினார்கள்! அவை மாலை நேரப் பல்கலைக் கழகங்களைப் போல இருந்தன!

அந்த மரபு விடுபட்டுப் போனால், நம் கழகத்தின் பெருமையும் தடைபட்டுப் போகும்!

**எனவே படிக்கும் பழக்கத்தை, நம் கட்சித் தோழர்கள் ஒரு நாளும் கைவிட்டு விடக்கூடாது! படிப்பு என்பது வெறும் பழக்கம் இல்லை, அது ஒரு பண்பாடு!**

தி.மு.க.வினரிடம் படிக்கும் பழக்கம் உண்டு என்பதைவிட, படிக்கும் பழக்கம் உள்ளவர்கள்தான் தி.மு.க.வினர் என்பதை நாம் கவனப்படுத்திக் கொள்ள வேண்டும்!

இன்று புதிதாய்ப் புறப்பட்டிருக்கும் சில கட்சியினர், ஓரிரு நிமிடங்கள் தங்கள் கைபேசிகளில், காட்சிகளைப் பார்ப்பதோடு நிறுத்திக் கொள்கிறார்கள். அவர்களைக் குறை சொல்ல முடியாது! அவர்களின் வரலாறு அவ்வளவுதான்! ஆனால் ஒரு நூற்றாண்டைக் கடந்து ஒளி வீசும் நம் இயக்கத்தின் வரலாறு நீண்டது, நெடியது! எனவே சின்னச் சின்னக் காட்சிகளைப் பார்ப்பதில் தவறில்லை என்றாலும், அது மட்டுமே நமக்குப் போதாது! படிப்பதே நமக்குப் பயன்தரும்!

அதனால்தான் நம் அன்பிற்குரிய தலைவர், தன்னைப் பார்க்க வரும்போது, பொன்னாடைகளோடு வரவேண்டாம், புத்தகங்களோடு வாருங்கள் என்கிறார்! அதன் பொருளை நாம் புரிந்து கொள்ள வேண்டும்!

**தனக்கு வரும் நூல்களை அவர் நாடெங்கும் அனுப்பி வருகிறார், கடல் கடந்து வாழும் தி.மு.க. வினரின் படிப்பகங்களுக்கும் கொடுத்து வருகிறார்!**

**நம் கட்சியினர் எல்லோரும் தொடர்ந்து படியுங்கள் என்பதே அதன் பொருள்!**

அனல் பறக்கும் அரசியல் சூழல்களுக்கு இடையிலும், நம் அன்புத் தலைவர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், பல்லாயிரக்கணக்கான பக்கங்களை எழுதிக் குவித்திருக்கிறார் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்!

உடன்பிறப்பே என்று அழைத்து, எத்தனை கடிதங்கள், தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள் தொடங்கி எத்தனை இலக்கியங்கள், எத்தனை அரசியல் கட்டுரைகள், எத்தனை எத்தனை சிறுகதைகள், நாவல்கள்! எண்ணிப் பார்க்கவே பெரும் வியப்பாக இருக்கிறது! ஒரு முழு நேர எழுத்தாளரால் கூட எழுதி முடிக்க முடியாத அளவிற்கு, எண்ணிறந்த நூல்களை, பன்னூறு பக்கங்களில் நமக்காக எழுதித் தந்துள்ளவர் நம் தலைவர் கலைஞர்!

**தன் வாழ்க்கை வரலாற்றை, “நெஞ்சுக்கு நீதி “ என்னும் பெயரில், ஆறு தொகுதிகளாக, 4162 பக்கங்களில் அவர் எழுதி முடித்திருக்கிறார்!**

**அது அவருடைய வரலாறு மட்டும் இல்லை, நம் தமிழினத்தின் வரலாறு, திராவிட இயக்கத்தின் வரலாறு, இடையிடையே இந்தியா மற்றும் உலகத்தின் வரலாறு!**

**இதுவரையில் அந்த நெஞ்சுக்கு நீதியைப் படிக்காத தி.மு.க. தொண்டர்கள் இருப்பின், இன்றே படிக்கத் தொடங்குங்கள்!**

அவ்வளவு பெரிய புத்தகத்தை எப்படிப் படிப்பது என்று எண்ணி மலைக்க வேண்டியதில்லை! கொஞ்சம் கொஞ்சமாகப் படிக்கலாம். ஒவ்வொரு நாளும் 15 நிமிடங்களையாவது படிப்பதற்கு நாம் ஒதுக்கிக் கொள்வோம்!

15 நிமிடங்கள் போதுமா என்று கேட்டால், கண்டிப்பாகப் போதாது! எனினும் இது ஒரு தொடக்கமாய் இருக்கட்டும்! படிக்கப் பழகி விட்டால், பிறகு நம்மை அறியாமலேயே நாம் அதற்குக் கூடுதல் நேரத்தை ஒதுக்கி விடுவோம்!

**நல்ல நூல்களைப் படிக்கும் தொண்டர்களால்தான், நல்ல கட்சி இங்கே வலுப்பெறும்! நல்ல கட்சி வலுப்பெறும் போதுதான், நல்ல நாடு உருவாகும்!**

**கைபேசிகளில் ரீல்ஸ் எனப்படும் சிறிய சிறிய காட்சிகளப் பார்க்கும் நேரம் குறைவாகவும், படிக்கும் நேரம் கூடுதலாகவும் ஆகட்டும்! படிக்கப் படிக்க, பிறகு நூல்களைப் படைக்கும் பழக்கமும் தானாகவே வந்து விடும்!**

**வாருங்கள் தோழர்களே, பார்ப்போம், படிப்போம், படைப்போம்!**

அன்புடன்
**சுப.வீரபாண்டியன்**



### ஜெயங்கொண்டம் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்

# க.சொ.கணேசன் 21 ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்ச்சி!

அரியலூர், ஆக. 24-

அரியலூர் மாவட்டம் செயங்கொண்டம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், மொழிப்போர் தியாகி மறை திரு க.சொ.கணேசன் அவர்களின் 21 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தா.பழூர் ஒன்றியம் கண்டியங்கொல்லை கிராமத்தில் அமைந்துள்ள அவரது நினைவிடம், மற்றும் திருவுருவச் சிலைக்கு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அதனை தொடர்ந்து தா.பழூரில் அமைதி ஊர்வலம் நடைபெற்றது.

இந்நிகழ்வுகளில் மாவட்ட துணை செயலாளர் மு.கணேசன், பொதுக்குழு உறுப்பினர்கள் சி.ஆர்.எம். பொய்யாமொழி, ஆர்.எம்.அன்பழகன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் ஜெயங்கொண்டம் மத்தியம் இரா.மணிமாறன், தா.பழூர் மேற்கு ப.தனவேல், ஜெயங்கொண்டம் மத்தியம் நா.கணேசன்,

ஜெயங்கொண்டம் நகர செயலாளர், நகராட்சி துணைத் தலைவர் வெ.கொ. கருணாநிதி,

தி.க.ஒன்றிய செயலாளர் வெங்கடாசலம் மாவட்ட அணி அமைப்பாளர்கள் எம்.ஜி.இராஜேந்திரன், எஸ்.ஆர். இராமராஜன், கொண்டியார் செல்வராஜ், து.ப.புனித வேல், தா.பழூர் ஒன்றிய நிர்வாகிகள்

அவைத்தலைவர் எஸ்.சூசைராஜ், ஒன்றிய கழக துணை செயலாளர் அ.இராஜேந்திரன், இந்துமதி நடராஜன், மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.ஆர்.தமிழ் செல்வன், சி.கண்ணதாசன், மாவட்ட அணி துணை அமைப்பாளர்கள் இரா.சங்கர், ந.கார்த்திகை குமரன், த.குணசீலன், தங்க பிரகாசம், மா.சங்கர், எழிலரசி அர்ச்சுனன், நீல. மகாலிங்கம், தா.பழூர் நகர செயலாளர் கண்ணன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், தோழமைக் கட்சியினர் மற்றும் கழக உடன்பிறப்புகள் பெருந்திரளாக கலந்துகொண்டு மரியாதை செலுத்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வழக்கறிஞர் அ.மு. அசன் முகம்மது
### ஆகஸ்ட் 24 (2016)



இளம் வயதிலேயே திராவிட இயக்கத்தின்மீது பற்று கொண்டு, மாவட்ட பிரதிநிதி, பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட வழக்கறிஞர் அணி புரவலர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

கவிதை, கட்டுரை எழுதுவதில் வல்லவரான இவர், மிசா நெருக்கடி காலத்தில், கழக நாளேடான ‘முரசொலி’யில் துணை ஆசிரியராக பணியாற்றியவர்.

திருவாரூர் மாவட்டம், அத்திக்கடை ஊராட்சி துணைத் தலைவராக பொறுப்பேற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் முதல் கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**